*I.A.No.*2/2023 in O.S.No.147/2021, District Munsif Court, Palani.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை : திரு. கி.கார்த்திக், எம்.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**
**2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை**

***I.A.No.*2/2023**
**in**
**O.S.No.147/2021**

1. வேலுச்சாமி கவுண்டர்
2. துளசியம்மாள்
3. சின்னத்துரை --- மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. சுப்பிரமணி
2. வளர்மதி
3. தங்கச்சாமி ---எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சிவக்குமார், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 17.11.2023 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

மனுச்சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வேலுசமுத்திர கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் அளவை செய்தும் நிலவியல் தன்மைகளை குறிப்பிட்டும்

வரைபடம் மற்றும் புகைப்படத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுமாறு மனுதாரர்கள் /வாதிகளால் சி.பி.சி. ஆர்டர் 26, ரூல் 9 மற்றும் பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:–**

வழக்கு சொத்தானது ஆதியின் 1ம் வாதியின் பாட்டனார் நல்லப்ப கவுண்டர் மற்றும்1ம் வாதியின் தந்தை குப்பண கவுண்டர் அவர்களுக்கு பாத்தியப்பட்டு இருந்தும், மேற்படி குப்பண கவுண்டர் இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகளான நல்லப்ப கவுண்டர் அவர்களுக்கு ஏ ஷெட்யூல் பாகமாகவும், வேலுச்சாமி கவுண்டர் அவர்களுக்கு பி ஷெடுல் பாகமாகவும், ஈஸ்வரன் அவர்களுக்கு சி செட்யூல் பாகமாகவும், 29.09.1992 ஆம் தேதிய ஆவணப்படி பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டு, 1ம் வாதி வேலுச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பி ஷெட்யூல் சொத்தானது சர்வே எண்கள் 55/8, 55/7, 55/17 மற்றும் 55/8 இல் அமைந்துள்ளதாகவும், மேற்படி சர்வே எண்களுக்கு மாமுல் வழிநடை பாதை பாத்தியமாக வழக்கு சொத்தான வண்டிப் பாதையே ஆகும் என்றும், அதனை மனுதாரர்/வாதிகள் அவரது இதர பாகஸ்தர்களும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்றும், ஆனால் தற்போது பிரதிவாதிகள், மனுதாரர்கள்/வாதிகள் பயன்படுத்தி வந்த மாமுல் பாதையான வண்டி பாதையை உபயோகப்படுத்த விடாமல் பிரச்சனை செய்து வருகிறார்கள் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் நிலங்களுக்கு செல்லும் பாதைகளை தாவா வழக்கு மூலம் எழுந்த பின்பு உபய தரப்பினர்கள் முன்னிலையில் இதுவரை அளவை செய்யவில்லை என்றும், மனுதாரர் சொத்தையும் தாவா வண்டிப்பாதையையும் அளவை செய்தால் மட்டுமே மனுதாரர்களுக்கு சொந்தமான சொத்துகளுக்கு பாதை பாத்தியம் வழக்கு சொத்தான வண்டிப்பாதை நிலவியல் ரீதியாக எந்த சர்வே

எண்ணில் உள்ளது என்பதை உரிய முறையில் எடுத்து காண்பிக்க முடியும் என்பதால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர் உரையின் சுருக்கம்:–**

இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிறுத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது. சாட்சியங்களை சேகரிக்க வேண்டி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தனது வழக்கில் எந்த ஒரு இடத்திலும் வண்டித்தடம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. சொத்துக்கள் விவரத்திலும் அவர்கள் ஆவணங்களிலும் வாய்மொழி சாட்சியத்திலும் மனுதாரர்கள் வண்டித்தடத்திற்காக சர்வே எண் அல்லது புல எண் அதன் உட்பிரிவுகள் எதையும் குறிப்பிட்டு கூறவில்லை. தோராயமான ரீதியில் வண்டித்தடம் உள்ளதாக தெரிவித்து அதை அளவீடு செய்ய வேண்டுமாய் மனு தாக்கல் செய்திருப்பது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல. சொத்து விவரத்தில் பூமிக்கு உண்டான வண்டிப் பாதை சகிதம் என்று மட்டுமே தெரிவித்துவிட்டு அதை அளக்க கோரியிருப்பது சரியானது அல்ல. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்களது குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு மேற்கொண்டு வாதிகளின் சாட்சியத்திற்காக வாய்தா உள்ளது. மனுதாரர் குறுக்கு விசாரணையிலும் மேற்படி சாட்சிகள் வண்டித்தடத்தை குறித்து சரியான சாட்சியம் அளிக்கவில்லை. அதை ஈடு செய்வதற்காகவே தற்சமயம் நீதிமன்ற ஆணையர் வேண்டி இந்த மனு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு வழக்கை காலம் தாழ்த்த வேண்டும் என்பதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒன்றாக உள்ளதால் இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய விசயம் யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. இந்த மனுவில் எழுகின்ற பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**7. தீர்வு**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தனது மனுவில் தாவா சொத்து ஆதியில் 1ம் வாதியின் பாட்டனார் நல்லப்ப கவுண்டர் மற்றும் 1ம் வாதியின் தகப்பனார் குப்பண கவுண்டர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு இருந்ததாகவும், குப்பண கவுண்டர் இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகளான நல்லப்ப கவுண்டர் அவர்களுக்கு ஏ ஷெடுல் பாகமாகவும், வேலுச்சாமி கவுண்டர் அவர்களுக்கு பி ஷெட்யூல் பாகமாகவும், ஈஸ்வரன் அவர்களுக்கு சி ஷெட்யூல் பாகமாகவும் கடந்த 29.09.1992 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி கிடைக்கப்பெற்றதாகவும், 1ம் வாதி வேலுச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பி ஷெடுல் சொத்தானது சர்வே எண்கள் 55/8, 55/7, 55/17 மற்றும் 55/8ல் அமைந்துள்ளதாகவும், மேற்படி சர்வே எண்களுக்கு மாமுல் வழிநடை பாதை பாத்தியமாக வழக்கு சொத்தான வண்டிப்பாதையை ஆகும் என்று குறிப்பிட்டு பிரதிவாதிகள் தாவா வழக்கு சொத்தான வண்டிப்பாதையை உபயோகப்படுத்த விடாமல் பிரச்சனை செய்து வந்ததால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், தற்போது வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு தாவா வழக்கு சம்பந்தப்பட்ட இடத்தினை நேரில் ஆய்வு செய்து நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக

அலுவலர் ஆகியோரது முன்னிலையில் நீதிமன்ற ஆணையருடன் நிலவியல் தன்மைகளை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் புகைப்படத்துடன் கூடிய அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

8. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றும், சாட்சியங்களை சேகரிக்க வேண்டி மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் எந்த ஒரு இடத்திலும் வண்டித்தடம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு தெரிவிக்கப்படவில்லை என்றும், மேலும் தாவா சொத்துக்கான சர்வே எண் அல்லது புல எண் அதன் உட்பிரிவுகள் எதையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், எனவே இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்யும்போது, இந்த மனுவில் மனுதாரர் கோரியுள்ளபடி நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா இடத்தின் வரைபடம் மற்றும் புகைப்படங்களை பார்வையிடும் போது வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட நிலவியல் உண்மைகள் மற்றும் தாவா சொத்துக்களின் உண்மை நிலவரம் என்னவென்று தெரியவரும் என்பதால் நீதியின் நலன் கருதி இந்த மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்த மனுவில் இந்த நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

9. இறுதியாக,

1. இம்மனு அனுமதிக்கப்பட்டு,
2. வழக்கறிஞர் திருமதி.ராதிகா என்பவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது.
3. நீதிமன்ற ஆணையர் உபயவாதிகளுக்கும் அறிவிப்பு கொடுத்த பின்பு, மனுச்சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வேலுசமுத்திர கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர்

உதவியுடன் அளவை செய்தும் நிலவியல் தன்மைகளை குறிப்பிட்டும் வரைபடம் மற்றும் புகைப்படத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

4. வழக்கறிஞர்/ நீதிமன்ற ஆணையரின் கட்டணம் ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)–யை நீதிமன்ற ஆணையருக்கு இன்றிலிருந்து ஒருவார காலத்திற்குள் நேரிடையாக செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

5. நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா 29.01.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 28.11.2023 ஆம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2023.11.28 17:52:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி:–</u> இல்லை.
<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>இல்லை.
<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:–</u> இல்லை.
<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>இல்லை.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2023.11.28 17:52:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

***I.A.No.*2/2023 in O.S.No.147/2021, District Munsif Court, Palani.**

***I.A.No.*2/2023**
**in**
**O.S.No.147/2021**

28.11.2023.

உத்தரவு அவையறிய பகரப்பட்டது. இறுதியாக,

1. இம்மனு அனுமதிக்கப்பட்டு,
2. வழக்கறிஞர் திருமதி.ராதிகா என்பவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது.
3. நீதிமன்ற ஆணையர் உபயவாதிகளுக்கும் அறிவிப்பு கொடுத்த பின்பு, மனுச்சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை வேலுசமுத்திர கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் அளவை செய்தும் நிலவியல் தன்மைகளை குறிப்பிட்டும் வரைபடம் மற்றும் புகைப்படத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.
4. வழக்கறிஞர்/ நீதிமன்ற ஆணையரின் கட்டணம் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)-யை நீதிமன்ற ஆணையருக்கு இன்றிலிருந்து ஒருவார காலத்திற்குள் நேரிடையாக செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
5. நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா 29.01.2024.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2023.11.28 17:52:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.